

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் ஒரத்தநாட்டில் நடைபெற்ற ”தமிழ்நாடு போராடும் ; தமிழ்நாடு வெல்லும்! ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் எம்.இராமசந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, மேயர் சண். இராமநாதன், அஞ்சுகம் பூபதி, எல்.ஜி.அண்ணா, கனகவள்ளி பாலாஜி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின் படி பால்பண்ணை பேருந்து நிலையம் தஞ்சாவூர் ரோட்டில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் வரவேற்புரை ஆற்றினார் தலைமைக் கழக பேச்சாளர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! பி.ஸ்ரீராமுலு தலைமை!

# துறைமுகம் மேற்கு பகுதியில் 272 மாணவ - மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்!



சென்னை,மார்ச்.16-

மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு- முன்னிலையில் பி.ஸ்ரீராமுலு- தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் - மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு துறைமுகம் மேற்கு பகுதி சார்பாக, 272 கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரணங்களை - உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 21, கல்லூரி மாணவர் சிறந்தோங்கட்டும்! கழகத்தலைவரின் புகழ்பாடட்டும்!! எனும் தலைப்பில் துறைமுகம் மேற்கு பகுதியில், கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் உபகரண ங்கள் வழங்கும் விழா 14.03.2025 வெள்ளி அன்று, மாலை 4.00 மணியளவில், சென்னை, சௌகார்பேட்டை, திருபள்ளி தெரு, சிவாஞ்சி ஜெயின்பவனில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் 5வது மண்டலக்குழுத்தலைவர் ப.ஸ்ரீராமுலு எம்.சி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட். ஆசாத், என்.பி.எம். சேக்அப்துல்லா, எல். சம்பத்குமார், பி.விஜயகுமார், இரா.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், எம்.வினாயகம், எம். இப்ராஹிம்கனி, பா. பிரதீப்குமார் முன்னிலையில் 272 கல்லூரி மாணவ - மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் உபகரணங்களை - உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம. முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், வி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கதிரவன்(எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், வெ.பரிமளம், ராஜேஷ் ஜெயின், நவின், லண்டன் முருகன் ஆகியோர் வரவேற்றனர்.

மேலும், இந்நலத் திட்ட விழாவில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், எல்.எழில் அரசு, ஜி.மாசிலாமணி, M.V.R..சரவணக்குமார், எம்.நாராயணன், வி.எம்.முருகவேல், வி.அசோக்குமார், டி.எஸ்.சேகர், நா.ரஞ்சித், விஜயாலயன், கே.ஆர்.மதன், ஏ.பி. எஸ்.செந்தில்குமார், வி.சங்கர், எஸ்.கதிர்வேலு, ஆர்.தங்கமணி ஏ.மது சூதனன், வி.ஜி சுகுமார், டி.சுபாஷ்சந்திரபோஸ், ஹாஜி முகமதுஅலி, சேகர்(எ) பிரஸ்சேகர், ஆடியோ கே.சம்பத், M.சுரேஷ், P.சகாயராஜ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நலத்திட்ட விழாவில் பா.கதிரவன், மா.ஜெய்சங்கர், ஆர். ரவிச்சந்திரன் ஆகியோர் நன்றி கூறினார்கள்.




புதுக்கோட்டை மாநகர திமுக சார்பில் கண்டன பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளரா வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், செ.கணேஷ் வரவேற்பில் நடைபெற்றது. பேச்சாளர் வழக்கறிஞர் சோம.செந்தமிழ்செல்வன் கண்டன உரை நிகழ்த்தினார். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அரு. விரமணி, சுப.சரவணன், சு.சண்முகம், க.மதியழகன், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, எம்லியாகத் அலி, கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன் அ.ரெத்தினம், கலைஞர் கருணாநிதி உள்ளிட்ட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### திருப்பூர் தெற்கு மாவட்டத்தில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்துப் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், மார்ச் 15-

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில் கழக இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு நிதிப் பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறுசீரமைப்பில் அநீதி ஒன்றிய அரசைக் கண்டித்து திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக இளைஞர் அணி சார்பில் இன்று 16.03.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில் உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குடிமங்கலம் மேற்கு ஒன்றியம், கொங்கல் நகரம், அண்ணா திடலில் விழிப்புணர்வு பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதில் எனது தலைமையில் (இல. பத்மநாபன்), திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், கழக மகளிரணி துணைச் செயலாளர், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, தலைமை கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர்

மருத்துவர் எஸ்.ஏ.எஸ். ஹபிசுல்லா, தலைமைக் கழக பேச்சாளர் ஆட்லின் ஆகியோர் ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன பேருரையாற்றுகிறார்கள்.

அதுசமயம் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் இந்நாள் முன்னாள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர், கழகத்தின் செயல் வீரர்கள் மற்றும் உள்ளாட்சி மக்கள்பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொள்வதோடு பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சென்னை, அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, பொது மக்களும் கூட்டத்தில் பங்கெடுத்து கொள்ளும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாடு செய்திட வேண்டுமாய் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல. பத்மநாபன் கேட்டுக்கொண்டுள்ளார்.

### தா.இளையஅருணா தலைமை! ஆர்.டி.சேகர் முன்னிலை!

# இராயபுரம் 51 (அ) வட்டத்தில் நலத்திட்ட உதவிகள் - பொதுக்கூட்டம்!

## ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., சூர்யா கிருஷ்ணமூர்த்தி - இரா.செந்தில்குமார் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 16-

சென்னை வடக்கு மாவட்டம் ராயபுரம் கிழக்கு பகுதி 51 (அ) வட்டம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் 10.03.2025 அன்று மாலை 6.30 மணிக்கு ஆண்டியப்பன் முதலி தெரு துர்கா பவன் ஹோட்டல் எதிரில் பி கண்ணன் 51அ வட்டச் செயலாளர் தலைமையில் மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் தலைமை செயற்குழு உறுப்பினர், தா. இளைய அருணா சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி பகுதிச் செயலாளர் இரா செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை தலைமை கழக பேச்சாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தி உரையாற்றினார்.

கூட்டத்தின் முடிவில் மாற்றதிறனாளியான கழகத் தோழர் அருள்நாதன் அவர்களுக்கு சுயமாக தொழில் தொடங்கிட ரூபாய் அய்யாயிரம் மதிப்புள்ள துணிவகைகள் பெண்களுக்கு தையல் இயந்திரம் சலவை தொழிலாளிக்கு பித்தளை இஸ்திரி பெட்டி ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை பொதுமக்களுக்கு வேட்டி சட்டை புடவை ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம். ஆர். மூர்த்தி தலைமை செயற்குழு உறுப்பினர் தா இளைய அருணா ஆகியோர் வழங்கினர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டோர் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பி.டி.பாணடிச்செல்வம் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி பொதுக்குழு உறுப்பினர்கள் நா சண்முகம் கி. ராஜேந்திரன்பகுதி நிர்வாகிகள் த.ஜெயபால், பி. சேகர், கு.சுந்தர் லோ மோகன் பி. ஜெயலட்சுமி கு ரமேஷ் எஸ் திருஞானம் இ மதன் வட்டச் செயலாளர்கள் ஆர்.வி..கணேஷ் கா.கலைச்செல்வன் பாலா லட்சுமணன் இரா.பாலன் ஜே கௌரிசங்கர் எஸ். புகழேந்தி,

என் கிருஷ்ணன் கே கோவிந்தராஜ் மாவட்ட பிரதிநிதிகள் வி குமார் பி.வி ஆறுமுகம் ஆர் ஏகாம்பரம் இரா.மருது பாண்டியன் பிரபுடேவிட் எஸ் ஏ ராஜா கே பாரூக் பாஷா எஸ் ரவிக்குமார் எ ரமேஷ் பி ராஜி டி தனபால் கே ஐயப்பன் . வி மணிகண்டன் எம்.செல்வம் புக்ஸ் ஸ்டால் கண்ணன் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பி செந்தில்குமார் லியோ டி சுரேஷ் கார்த்திக் செங்குட்டுவன கா கோவிந்தசாமி Ad.ஜே கே.நாதன் கட்பீஸ். பா சோமசுந்தரமூர்த்தி கே என் பார்த்திபன் அத்தோ பி முனுசாமி, ஐ.சி.எப். பழனி, ஆர். டி.ஜெயசங்கர், வி.கே. ராஜ், பி.சதீஷ்குமார், லாட்டுக்கடை செந்தில், டில்லி ரங்கா, என்.மாலிக், கோ. வேல்மணி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### தி.மு.க. மாணவர் அணி

## மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கூட்டம்

### மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 21.03.2025 வெள்ளிக்கிழமை, காலை 10.30 மணியளவில், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான “கலைஞர் அறிவாலயத்தில்” எனது தலைமையில், துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூரணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : மாணவர் அணியின் செயல்பாடுகள் மேம்படுத்துதல் குறித்து

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை– 600 018.
நாள்: 14.03.2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூரை அடுத்த அக்ரஹாரம் பகுதியில் கழகதலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஆதரவற்ற,மனநலம் பாதிக்கபட்ட முதியோர் மறுவாழ்வு மையத்தில் மாவட்ட துணை செயலாளர் பொறியாளர்.சி.கிருஷ்ணகுமார் தலைமையில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் 200 பேருக்கு அசைவ உணவு வழங்கினார்.உடன் நகர செயலாளர் முல்லை.ரவி,ஒன்றிய செயலாளர்கள் சந்திரமோகன்,சௌந்திரராசு,வேடம்மாள் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.